செ.வெ.எண்:32/ஏப்ரல் நாள்:26.04.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## வர்த்தகச் சங்க பிரதிநிதிகள் மற்றும் பெட்ரோலிய பொருட்கள் விற்பனையாளர் சங்க பிரதிநிதிகள் ஆகியோருடனான ஆலோசனைக் கூட்டம்

### தேர்தல் செலவின கணக்குப் பார்வையாளர் டாக்டர்.பிராதாப் நாராயண சர்மா மற்றும்

### மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (26.04.2016) மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தேர்தல் செலவின கணக்குப் பார்வையாளர் (பரமக்குடி, திருவாடானை) டாக்டர்.பிராதாப் நாராயண சர்மா ஆகியோர் தலைமையில், வர்த்தகச் சங்க பிரதிநிதிகள் மற்றும் பெட்ரோலிய பொருட்கள் விற்பனையாளர் சங்க பிரதிநிதிகள் ஆகியோருடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது,

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் தேர்தல் செலவின கணக்குப் பார்வையாளர் ஆகியோர் தெரிவித்ததாவது:-

இராமநாதபுரம் மாவட்டம் தேர்தல் வாக்குப்பதிவு நாள் நெருங்குவதைத் தொடர்ந்து தேர்தல் முன்னேற்பாடுப் பணிகள் துரிதாமாக மேற்கொள்ளப்படுவதோடு முறைகேடுகளை தடுத்திடும் வகையில் 24 மணி நேரமும் தொடர்ந்து கண்காணிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏப்ரல் 22-ஆம் தேதி முதல் வேட்பாளர்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்து வருகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் வேட்பாளர்களுக்கு உதவிடும் வகையில் வாக்காளர்களை தூண்டும் விதமாக வாக்காளர்களுக்கு பணமாகவோ, பொருளாகவோ ஏதும் வழங்கிடுதல் கூடாது. வர்த்தகச் சங்க பிரதிநிதகள் தங்களது நிறுவனங்களில் சந்தேகப்படும்படியாக அதிகளவில் மொத்தமாக பொருட்களை வாங்கும் நபர்கள் குறித்து உடனடியாக தகவல் தெரிவித்திட வேண்டும்.

பெட்ரோல் பங்குகளில் சந்தேகப்படும்படியாக மொத்தமாக பெட்ரோல்/டீசல் வாங்கும் நபர்கள் குறித்து தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு புகார் தெரிவித்திட வேண்டும். இது தவிர தங்களது நிறுவனங்களில் மொத்தமாக பணம் செலுத்தி டோக்கன் முறையில் வாக்காளர்களைக் கவரும் வகையில் பொருட்கள்/பெட்ரோல்/டீசல் வழங்குவதைத் தவிர்த்திட வேண்டும். தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் ஆய்வு செய்யும்போது இத்தகைய முறைகேடுகள் ஏதும் கண்டறியப்பட்டால் சம்மந்தப்பட்ட நிறுவனத்தின் மீது இந்திய சட்டடத்தின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் தேர்தல் செலவின கணக்குப் பார்வையாளர் ஆகியோர் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலிஅக்பர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருமதி.சாந்தா, தேர்தல் வட்டாட்சியர் திரு.தர்மன் உட்பட வர்த்தகச் சங்க பிரதிநிதிகள் மற்றும் பெட்ரோலிய பொருட்கள் விற்பனையாளர் சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**